RNI. TNTAM21232

# மகளிர் உரிமை

## MAGALIR URIMAI

மலர் : 8 | இதழ் : 2 | விலை : 10/- | பிப்ரவரி : 2024
Vol. : 6 | Issue : 2 | Price : 10/- | February : 2024

## விஜய் அரசியல் ஆட்டம் ஆரம்பம்..



## 2026 தேர்தலில் களமிறங்கும் தமிழக வெற்றி கழகம்..

## முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதி சென்றடைந்ததா? மக்கள் கருத்து

# SME
# திருமண தகவல் மையம்

UDYAM - TN - 28 - 0062198





## அனைத்து சமுதாய வரன் பார்த்து தரப்படும்

தொடர்புக்கு :

## 83443 99714, 97877 63180

எண்.7, கம்பர் வீதி, ஊத்துக்குளி ஆர்.எஸ்.
திருப்பூர் – 638 752

டச்சு மொபைல் இருந்தால் போதும்
ரூ.5 ரூபாயிலிருந்து ரூ.1800 ரூபாய்
வரைக்கும் வருமானம் பெறலாம்

**83443 99714**



## SME புரமோட்டர்ஸ்

இடம் வாங்க விற்க ஹவுசிங் லோன்
அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

**94898 00188**

RNI. TNTAM21232

# மகளிர் உரிமை

## MAGALIR URIMAI

| மலர் : 8 | இதழ் : 2 | விலை : 10/- | பிப்ரவரி : 2024 |
|---|---|---|---|
| Vol. : 6 | Issue : 2 | Price : 10/- | February : 2024 |


வெளியிடுபவர் – ஆசிரியர் : திருமதி. **பிரேமாவதி அசோக்குமார்**

Email ID : Magairurimai@gmail.com

நிர்வாக & சட்ட அலோசகர் : **T.Kஅசோக்குமார்** B.A., B.L.,
**94442 59059**


| | |
|---|---|
| கௌரவ ஆசிரியர் & ஆலோசகர் | : **S.கோவிந்தராஜ்** |
| கௌரவ உதவி ஆசிரியர் | : **T.Kஅசோக்குமார்** |
| மக்கள் தொடர்பு | : **R.விஜயன்** |
| சென்னை தலைமை நிருபர்கள் | : **C.கணபதி** |
| மாவட்ட வாரியான நிருபர்கள் | : **J.பொன்னுராஜம்** |
| | **S.வின்சென்ட் விஜயகுமார்** |
| | **R.ஆதிமூலம்** |
| | **J.ஜானகிராமன்** |
| | **D.பிரசன்னா** |
| | **V.மனோஜ்குமார்** |
| முதன்மை நிருபர் திருப்பூர் மாவட்டம் | **B.சௌகத்அலி பாபு** |
| நிருபர் ஈரோடு மாவட்டம் | **செந்தில்குமார் மாணிக்கம்** |
| இதழ் வடிவமைப்பு | : **சந்துரு எம்** |


Owned, Published & Printed by Premavathy Ashokumar, Printed at New Karthik Printers, No.26A, 2nd Street, Bharatheeswarar Colony, Kodambakkam, Chennai - 600 024. and Published from D.No.13/1, Dhayasadan Road, Koyambedu, Chennai-600 107, Editor : Mrs. Premavathy Ashokumar




**கிரக பெயர்ச்சிகள்:** 2024ஆம் ஆண்டில் முக்கிய கிரகங்களின் சஞ்சாரத்தைப் பார்த்தால் சனிபகவான் கும்பம் ராசியில் ஆண்டு முழுவதும் பயணம் செய்வார். மீன ராசியில் ராகுவும் கன்னி ராசியில் கேதுவும் ஆண்டு முழுவதும் பயணம் செய்யப்போகின்றனர். குருபகவான் ஏப்ரல் மாதம் வரை மேஷம் ராசியில் சஞ்சரிப்பார்.மே 1ஆம் தேதி முதல் பெயர்ச்சியாகி ரிஷப ராசிக்கு செல்கிறார். கிரகங்களின் பயணங்கள் பார்வையால் 12 ராசிக்காரர்களுக்கும் பலன்கள் எப்படி இருக்கும் என்று பார்க்கலாம்.



**மேஷம்:** 2024 புத்தாண்டு மேஷ ராசிக்காரர்களுக்கு அற்புதம். குருவினால் இன்பங்கள் அதிகரிக்கும். மிகப்பெரிய வெற்றி கிடைக்கும் வாழ்க்கை வசந்தமாகும் பணவரவு அற்புதமாக இருக்கும். பெண்களுக்கு உற்சாகமாக ஆண்டு நிறைய நகைகள் வாங்குவீர்கள். மாணவர்களுக்கு இது அதி அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது. மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு இது அதி அற்புதமான ஆண்டாக அமையும் என்பதில் சந்தேசமில்லை. ஆலய தரிசனம் அற்புத பலன்களை தரும் வாலாஜா பேட்டையில் அருள்பாலிக்கும் சொர்ண சனீஸ்வரரை வணங்குங்கள் சங்கடங்கள் தீரும்.



**ரிஷபம்:** சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட ரிஷப ராசிக்காரர்களுக்கு நிறைய லாபம் வரும் ஆனாலும் கடும் போராட்டம் இருக்கும். நீண்ட நாளாக தடை பட்டிருந்த காரியங்கள் தடைகள் நீங்கி வெற்றி கிடைக்கும். மகிழ்ச்சியும் சந்தோஷமும் அதிகரிக்கும். ஆடை ஆபரணங்கள் அதிகம் வாங்குவீங்க. மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஆண்டாக அமையும். வியாபாரம் தொழிலில் லாபம் வரும் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம் பட்டமங்கலத்தில் அருள்பாலிக்கும் குரு தட்சிணா மூர்த்தியை குரு ஹோரையில் தரிசனம் செய்ய நல்லதே நடக்கும்.

**மிதுனம்:** புதனை ராசி அதிபதியாகக் கொண்ட மிதுனம் ராசிக்காரர்களுக்கு சனி பகவான் சந்தோஷத்தை தரப்போகிறார். குருவின் சஞ்சாரம், பார்வையினால் பொன்னான ஆண்டாக

அமைகிறது. ரொம்ப சிறப்பான ஆண்டு. பெண்களுக்கு சொந்த வீடு கிடைக்கும். தம்பதியர் இடையே நெருக்கம் ஏற்படும். மாணவர்களுக்கு அற்புதமான ஆண்டு வெற்றிகள் தேடி வரும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள். நோய்கள் நீங்கி ஆரோக்கியம் அதிகரிக்க வாலாஜாபேட்டையில் எழுந்தருளியிருக்கும் தன்வந்திரி பகவானை வணங்குங்கள் நல்லதே நடக்கும். சனி பெயர்ச்சி பலன்.. 2024ல் பிசினஸ் சூப்பர்.. சனியால் பெட்டி நிறைய பணத்தை அள்ளப்போவது யார்?



**கடகம்:** சந்திரனை ராசி அதிபதியாகக் கொண்ட கடக ராசிக்காரர்களுக்கு குருபகவான் வெற்றிகளை தருவார். சனிபகவான் அஷ்டம சனியாக பயணம் செய்வதால் பேச்சிலும் செயலிலும் நிதானம் தேவை. குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். மாணவர்களுக்கு குருவின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு ரொம்ப லாபமான வாரம். அற்புதமான ஆண்டாக அமைகிறது. தடைகளை தாண்டி முன்னேற்றம் ஏற்படும். பவுர்ணமி நாட்களில் பூஜை செய்ய வெற்றிகள் தேடி வரும். மன கலக்கங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகமாகும்.



**சிம்மம்:** சூரியனை ராசி அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்களே, 2024ஆம் ஆண்டு உங்களுக்கு குதூகலம் நிறைந்த ஆண்டாக அமைகிறது. சின்ன சின்ன நோய்கள் எட்டிப்பார்த்தாலும் உங்களுக்கு பெரிய அளவில் செலவுகளோ பாதிப்புகளோ வராது கவலைப்பட வேண்டாம். பண வரவு அபரிமிதமாக இருக்கும். சொந்த பந்தங்களுடன் இருந்த பகை நீங்கும். உங்களுக்கு எதிரிகள் தொல்லை ஒழியும். வேலை செய்பவர்களுக்கு புரமோசன் கிடைக்கும். குடும்பத்தோடு உல்லாச பயணம் செல்வீர்கள். இந்த ஆண்டு தினசரி சூரிய நமஸ்காரம் செய்ய மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** மேன்மையான ஆண்டாக 2024 ஆம் ஆண்டு அமைகிறது. நீண்ட நாள் கனவு நனவாகும். குருவும் உங்களுக்கு சாதகமாக சஞ்சரிக்கிறார். பெண்களுக்கு கணவரின் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். உங்கள் அன்புக்கு உரியவர் இந்த ஆண்டு உங்களுக்கு நிறைய சர்ப்ரைஸ் கொடுப்பார். நகைகள், ஆடைகள் வாங்குவீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் அற்புதமான ஆண்டாக அமைந்துள்ளது. உயர்கல்வி யோகம் தேடி வந்துள்ளது. மஞ்சள், பச்சை அதிர்ஷ்ட நிறங்கள். புதன்கிழமை சீனிவாசபெருமாள் கோவிலுக்கு சென்று வழிபட நன்மைகள் நடைபெறும். புதன் பெயர்ச்சி பலன் 2024: தனுசு ராசியில் உருவாகும் கூட்டணி.. வெற்றியை ருசிக்க போகும் 6 ராசிக்காரர்கள்



**துலாம்:** சுக்கிரனை அதிபதியாகக் கொண்ட துலாம் ராசிக்காரர்களுக்கு 2024 ஆண்டு லாப கரமான ஆண்டாக அமையும். பங்கு சந்தை, ரேஸ், லாட்டரி மூலம் பண வருமானம் அதிகம் வரும் மன உற்சாகத்தோடு இருப்பீங்க. மாணவர்களுக்கு முன்னேற்றகரமான ஆண்டு. பெண்களுக்கு உற்சாகமான ஆண்டு கணவர் உங்களுக்காக நிறைய செலவு செய்வார். தம்பதியரின் ஒற்றுமை சந்தோஷத்தை அதிகரிக்கும். குருவின் பார்வை ராசி மீது விழுவதால் தொழிலில் லாபம் அதிகரிக்கும், ஆண்டு முழுவதும் திடீர் அதிர்ஷ்டங்கள் கிடைக்கும். வெள்ளிக்கிழமைகளில் அம்மன் கோவிலுக்கு போய் சுக்கிர ஓரையில் நெய் தீபம் ஏற்றி வழிபடுங்க நல்லதே நடக்கும்.



**விருச்சிகம்:** செவ்வாய் பகவானை அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களே, 2024 புத்தாண்டு புத்துணர்ச்சி தரக்கூடிய ஆண்டாக அமையப்போகிறது. இத்தனை ஆண்டுகளாக சிக்கல்களை சந்தித்து கடுமையான சவால்களுடன் வாழ்க்கையை ஓட்டி வந்தீர்கள் இனி உங்களுக்கு சந்தோஷமான ஆண்டாக அமையப்போகிறது. காரணம் குருபகவான் உங்க ராசிக்கு 7ஆம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியை பார்வையிடப்போகிறார். குடும்பம் குதூகலமாக இருக்கும். நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். பெண்களுக்கு முக்கியத்துவமான ஆண்டாக அமைகிறது. படிக்கும் மாணவர்களுக்கு வெளிநாடு போகும் யோகம் வரப்போகிறது. செவ்வாய் கிழமை முருகனை வணங்கி வர அற்புதமான யோகங்கள் தேடி வரும்.



**தனுசு:** குரு பகவானை ராசி நாதனாகக் கொண்ட தனுசு ராசிக்காரர்களே, 2024ஆம் ஆண்டு உங்களுக்கு வெற்றிகளும் சந்தோஷங்களும் நிறைந்த ஆண்டாக அமையப்போகிறது. நீங்கள் நினைத்த காரியங்கள் எல்லாம் மளமளவென முடிந்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். திருமணம் உள்ளிட்ட சுப காரியங்கள் கை கூடி வரும். தொட்டதெல்லாம் பொன்னாகும். தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உங்கள் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் ஆதரவும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். இந்த ஆண்டு திருச்செந்தூர் முருகனை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.



**மகரம்:** சனி பகவானை ராசி நாதனாகக் கொண்ட மகரம் ராசிக்காரர்களுக்கு 2024 புத்தாண்டு சந்தோஷத்தை தரக்கூடிய ஆண்டாக அமைந்துள்ளது. குரு பகவானின் பார்வை குதூகலத்தை தரப்போகிறது. உங்களின் விடா முயற்சி வெற்றிகளை தரும். அலுவலகத்தில் வேலை செய்யும் ஆண்கள் பெண்கள் விசயத்தில் கவனமாக இருக்க வேண்டும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை. இளம் பெண்கள் ஆண்களிடம் எச்சரிக்கையாக இருங்க, பெற்றோர்கள் சொல்வதை கேட்டு நடந்தால் பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம். படிக்கும் மாணவர்கள் கொஞ்சம் கவனமாக படிக்க வேண்டும். ஆலய தரிசனம் மன அமைதியை ஏற்படுத்தும். தொழில் வியாபாரிகள் அதிக முதலீடுகள் செய்ய வேண்டாம் தவிர்த்து விடுங்கள்.



**கும்பம்:** சனி பகவானை ராசி நாதனாகக் கொண்ட கும்ப ராசிக்காரர்களே உங்களுக்கு பிறக்கப் போகிற புத்தாண்டு அதி அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது. மனதிலும் உடம்பிலும் உற்சாகம் பிறக்கும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். பெண்களுக்கு கணவனின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். இளைஞர்களின் கல்யாண கனவுகள் நனவாகும். புத்திர பாக்கியம் கிடைக்கும். மாணவர்களுக்கு சிறப்பான முன்னேற்றம் ஏற்படும். சிவ ஆலயத்திற்கு சென்று பாலபிஷேகம் செய்ய பாதிப்பகள் குறையும். எதிரிகள் தொல்லைகள் ஒழியும்.



**மீனம்:** குரு பகவானை ராசி நாதனாகக் கொண்ட மீன ராசிக்காரர்களே 2024ஆம் ஆண்டு ஏழரை சனி காலமாக இருந்தாலும் தொழிலில் லாபம் அதிகம் கிடைக்கும். ராசியில் பயணம் செய்யும் ராகு யோகத்தையும் லாபத்தையும் தரப்போகிறார். நன்மைகளும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். மனதளவிலும் உடல் அளவிலும் தெம்பும் தைரியமும் கூடும். மிகப்பெரிய உயரங்கள் கிடைக்கும். சமூகத்திலும் சமுதாயத்திலும் மரியாதை அதிகரிக்கும். படிக்கும் மாணவர்களுக்கு உற்சாகமான ஆண்டாக அமையும். தொழில் வியாபாரிகளுக்கு லாபம் அபரிமிதமாக இருக்கும்.



# TAMILNADU DISTRICWISE COLLECTOR NAME CONTACT & EMAIL

**Ariyalur**
**Tmt J. Anne Mary Swarna IAS.,**
District Collector
Ariyalur - 621704
Phone : 04329-228336,04329 2288
Fax : 04329-228335
E-Mail : collrari[at]nic[dot]in

**Karur**
**Thiru M. Thangavel IAS.,**
District Collector
Karur - 639007
Phone : 04324-257511,04324 2571
Fax : 04324-257800
E-Mail : collrkar[at]nic[dot]in

**Krishnagiri**
**Tmt K.M. Sarayu, IAS**
District Collector
Krishnagiri - 635001
Phone : 04343-239500,04343 2394
Fax : 04343-239300,239100
E-Mail : collrkgi[at]nic[dot]in

**Madurai**
**Tmt M.S. Sangeetha, IAS.**
District Collector
Madurai - 625001
Phone : 0452-2531110 PABX-201,02532290
Fax : 0452-2530925
E-Mail : collrmdu[at]nic[dot]in

**Nagapattinam**
**Thiru Johny Tom Varghese, IAS.,**
District Collector
Phone : 04365-252700,
Nagapattinam - 611001
Fax : 04365-253048
E-Mail : collrngp[at]nic[dot]in

**Namakkal**
**Dr S. Uma , IAS.,**
District Collector
Namakkal - 637003
Phone : 04286-281101, 280103,042280111,280222
Fax : 04286-281106
E-Mail : collrnmk[at]nic[dot]in

**Perambalur**
**Tmt K. Karpagam, IAS.,**
District Collector
Perambalur - 621212
Phone : 04328-225700,04328 2243
Fax : 04328-224555, 224400
E-Mail : collrpmb[at]nic[dot]in

**Pudukottai**
**Tmt I.S Mercy Ramya IAS.,**
District Collector
Pudukottai - 622001
Phone : 04322-221663,221624-27 221690
Fax : 04322-221690
E-Mail : collrpdk[at]nic[dot]in

**Ramanathapuram**
**Thiru B. Vishnu Chandran IAS.,**
District Collector
Ramanathapuram - 623501
Phone : 04567-231220,04567 2213
Fax : 04567-231220
E-Mail : collrrmd[at]nic[dot]in

**Salem**
**Thiru S. Karmegam, IAS**
District Collector
Salem - 636001
Phone : 0427-2330030,0427 24503
Fax : 0427-2417575
E-Mail : collrslm[at]nic[dot]in

**Sivagangai**
**Tmt Asha Ajith, IAS.**
District Collector
Sivagangai -
Phone : 04575-241466,04575 2414
Fax : 04575-241455
E-Mail : collrsvg[at]nic[dot]in

**Chennai**
**Tmt Rashmi Siddharth Zagade IAS.,**
District Collector
Chennai -
Phone : 044-25228025,25234403,
Fax : 044-25228025
E-Mail : collrchn[at]nic[dot]in

**Thanjavur**
**Thiru Deepak Jacob, IAS.,**
District Collector
Thanjavur - 613001
Phone : 04362-230102,
Fax : 04362-230857
E-Mail : collrtnj[at]nic[dot]in

**The Nilgiris**
**Tmt M. Aruna, IAS.,**
District Collector
The Nilgiris - 643001
Phone : 0423-2442344,0416 22220
Fax : 0423-2443971
E-Mail : collrnlg[at]nic[dot]in

**Theni**
**Tmt R.V. Shajeevana, IAS.,**
Phone : 04546-253676,04546 2547
District Collector
Theni - 625531
Fax : 04546-251466
E-Mail : collrthn[at]nic[dot]in

**Thiruvallur**
**Dr T. Prabhushankar, IAS.,**
District Collector
Thiruvallur - 602001
Phone : 044-27661600,044 276622
Fax : 044-27661200
E-Mail : collrtlr[at]nic[dot]in

**Tiruvannamalai**
**Thiru B. Murugesh IAS.,**
District Collector
Tiruvannamalai -
Phone : 04175-233333,04175 2333
Fax : 04175-232222
E-Mail : collrtvm[at]nic[dot]in

**Thiruvarur**
**Tmt T. Charusree, IAS.,**
District Collector
Thiruvarur - 610001
Phone : 04366-223344,04366224738,225142
Fax : 04366-221033
E-Mail : collrtvr[at]nic[dot]in

# TAMILNADU DISTRICWISE COLLECTOR NAME CONTACT & EMAIL

**Thirunelveli**
**Dr K.P Karthikeyan IAS.,**
District Collector
Thirunelveli - 627009
Phone : 0462-2501032,04622501033,2501034
Fax : 0462-2500244
E-Mail : collrtnv[at]nic[dot]in

**Trichirappalli**
**Thiru M.Pradeep Kumar, IAS**
District Collector
Trichirappalli - 620001
Phone : 0431-2415358,0431 24201
Fax : 0431-2411929
E-Mail : collrtry[at]nic[dot]in

**Tiruppur**
**Thiru T. Christuraj, IAS**
District Collector
Tiruppur - 641604
Phone : 0421-2488811,
Fax : 0421-2488822
E-Mail : collrtup[at]nic[dot]in

**Thoothukudi**
**Thiru G. Lakshmipathy IAS.,**
District Collector
Thoothukudi - 628001
Phone : 0461-2340600,04612320050,2326747
Fax : 0461-2340606
E-Mail : collrtut[at]nic[dot]in

**Coimbatore**
**Thiru Kranthi Kumar Pati, IAS.,**
District Collector
Coimbatore - 641018
Phone : 0422- 2301114,0422 22226
Fax : 0422-2222630
E-Mail : collrcbe[at]nic[dot]in

**Vellore**
**Thiru P. Kumaravel Pandian IAS.,**
District Collector
Vellore - 632009
Phone : 0416-2252345,
Fax : 0416-2253034
E-Mail : collrvel[at]nic[dot]in

**Viluppuram**
**Thiru C. Palani, IAS.,**
District Collector
Viluppuram - 605602
Phone : 04146-222450,04146 2224
Fax : 04146-222470
E-Mail : collrvpm[at]nic[dot]in

**Virudhunagar**
**Dr V.P Jeyaseelan, IAS.,**
District Collector
Virudhunagar - 626002
Phone : 04562-252525,04562 2523
Fax : 04562-252500
E-Mail : collrvnr[at]nic[dot]in

**Tenkasi**
**Thiru D. Ravichandran IAS.,**
District Collector
Tenkasi -
Phone : 04633-290 547,
Fax : 04633-290545
E-Mail : collr-tks[at]gov[dot]in

**Kallakurichi**
**Thiru Sravan Kumar Jatavath, IAS**
District Collector
Kallakurichi -
Phone : 04151-222000,
Fax : -
E-Mail : collr-kki[at[gov[dot]in

**Chengalpattu**
**Thiru A.R Rahul Nadh IAS.,**
District Collector
Chengalpattu -
Phone : 044-27427412,
Fax : -
E-Mail : collr-cpt[at]nic[dot]in

**Tirupathur**
**Thiru D. Baskara Pandian, IAS**
District Collector
Tirupathur -
Phone : 04179-222111,
Fax : -
E-Mail : collr-tpt[at]gov[dot]in

**Ranipet**
**Tmt S. Valarmathi, IAS**
District Collector
Ranipet -
Phone : -,
Fax : -
E-Mail : collr-rpt[at]gov[dot]in

**Mayiladuthurai**
**Thiru A.P Mahabharathi, IAS.,**
District Collector
Mayiladuthurai - 609001
Phone : 04364-290797,
Fax : 04329-228335
E-Mail : collr-myd[at]nic[dot]in

**Cuddalore**
**Dr A. Arun Thamburaj IAS.,**
District Collector
Cuddalore - 607001
Phone : 04142-230999,04142 2306
Fax : -
E-Mail : collrcud[at]nic[dot]in

**Dharmapuri**
**Tmt K.Santhi, I.A.S.,**
District Collector
Dharmapuri - 636705
Phone : 04342-230500,04342 2328
Fax : 04342-230886
E-Mail : collrdpi[at]nic[dot]in

**Dindigul**
**Tmt M.N. Poongodi, IAS.,**
District Collector
Phone : 0451-2461199,0451 24327
Dindigul - 624004
Fax : -
E-Mail : collrdgl[at]nic[dot]in

**Erode**
**Thiru Raja Gopal Sunkara IAS.,**
District Collector
Erode - 638011
Phone : 0424-2266700,
Fax : 0424-2261555
E-Mail : collrerd[at]nic[dot]in

**Kancheepuram**
**Tmt Kalaiselvi Mohan, IAS.,**
District Collector
Kancheepuram - 631501
Phone : 044-27237433,
Fax : 044-27237789
E-Mail : collrkpm[at]nic[dot]in

**Kanniyakumari**
**Thiru P.N.Sridhar, IAS.,**
District Collector
Kanniyakumari - 629001
Phone : 04652-279555,
Fax : 04652-260999
E-Mail : collrkkm[at]nic[dot]in

# TAMILNADU HELP LINE NUMBERS

CORONA ( COVID 19 ) HELPLINE : 011-23978046 OR 1075

TAMIL NADU COVID 19 HELPLINE : 044-29510500 , 25615025 , 28593990

Centralized Helpline Number : 112

TAMIL NADU RAINS & FLOOD HELPLINE : 1070 OR WHATSAPP : 9445869848

NDRF Helpline Number : +91-9711077372

NDMA : 1078 OR 011-26701728

POLICE 100 OR 112

FIRE 101

AMBULANCE 102 OR 108

Coastal Security Helpline 1093

TRAFFIC POLICE 103

WOMEN HELPLINE 1091

CHILD LINE 1098

RAILWAY POLICE HELPLINE 9962500500 OR 1512

DISASTER HELPLINE 1070 OR 1077

GAS LEAKAGE 1716 , OR 011-1906

ANTI RAGGING COMPLAIN 18001805522

RAILWAY PROTECTION FORCE 1322

STUDENT AND EXAM HELPLINE 14417

RATION CARD HELPLINE 1967 1800-425-5901

TOURIST HELPLINE NUMBERS

Railway Enquiry 139

Tourist Enquiry 1913

Tourism Office ( Govt. of Tamil Nadu ) 25368538

Tourism Office ( Govt. of India ) 28460285

IMPORTANT NUMBERS :

NATURAL DISASTER : 1078 , 1077 , 1070 ,011- 26701728

CHENNAI CORPORATION COMPLAIN : 1913

DEPRESSION AND SUICIDE PREVENTION : 104 , 8526565656

TAMILNADU STATE DISASTER MANAGEMENT AUTHORITY : 9445869848

Blood Bank Information Service : 1910

# ஃபாலிமி விமர்சனம்.. தாத்தாவுக்காக காசிக்குப் போகும் குடும்பம்.. கடைசியில என்ன ஆச்சு?

*மலையாள இயக்குநர் நிதிஷ் சகாதேவ் இயக்கத்தில் இயக்குநர் பசில் ஜோசப் நடிப்பில் வெளியான காமெடி டிராமா படம் தான் ஃபாலிமி எனும் டைட்டிலில் குளறுபடியை வைத்து அதை விட குளறுபடியான ஒரு காமெடி குடும்பத்துடன் ஹீரோ அவனது தாத்தாவின் ஆசையை நிறைவேற்ற கேரளாவில் இருந்து காசிக்கு சென்று வருவது தான் கதை. ஆனால், ஆரம்பம் முதல் கடைசி வரை ஃபுல் ஃபன் கியாரண்டி. டொவினோ தாமஸை வைத்து மின்னல் முரளி படத்தை இயக்கிய இயக்குநர் பசில் ஜோசப் விபின் தாஸ் இயக்கத்தில் ஹீரோவாக நடித்த ஜெய ஜெய ஜெய ஜெயஹே படம் காமெடியாகவும் கருத்து ரீதியாகவும் வெளியாகி கலக்கியது. கணவன், மனைவிக்கு இடையே ஏற்படும் பிரிவு, ஆணுக்கு பெண் அடங்கிப் போகத் தேவையில்லை என பசில் ஜோசப்பை வைத்து பக்காவான படத்தை கொடுத்திருந்தனர். இந்நிலையில், நிதிஷ் சகாதேவ் இயக்கத்தில் பசில் ஜோசப் நடித்து நவம்பர் 17ம் தேதி வெளியான ஃபாலிமி திரைப்படம் சமீபத்தில் தமிழ் உள்ளிட்ட மொழிகளில் டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டாரில் ஓடிடியில் வெளியான நிலையில், அதன் விரிவான விமர்சனத்தை இங்கே பார்க்கலாம் வாங்க..*




**ஃபாலிமி கதை என்ன?:** *கடைசி காலத்தில் காசிக்கு செல்லத் துடிக்கும் தாத்தாவை தொடர்ந்து குடும்பத்தினர் தடுத்து வருகின்றனர். ஹீரோ ஒரு கட்டத்தில் தனக்கு திருமணம் ஆனதும் காசிக்கு அழைத்துச் செல்கிறேன் என வாக்கு கொடுக்கிறார். ஆனால், நிச்சயதார்த்த நேரத்திலேயே திருமணம் தடை படுகிறது. குடும்பத்துடன் காசிக்கு செல்ல முயற்சிக்க பாதி வழியில் தாத்தாவை ரயிலில் விட்டு விட்டு குடும்பமே இறங்கி விடுகிறது. தாத்தா திரும்ப கிடைத்தாரா? குடும்பத்துடன் காசிக்கு சென்றார்களா? தாத்தா எங்கே சென்றார்? ஹீரோவுக்கு திருமணம் ஆனதா? என ஏகப்பட்ட கேள்விகளுடன் படம் பயங்கர காமெடியாக நகர்கிறது. காமெடிக்கு பஞ்சமில்லை: பசில் ஜோசப் டப்பிங் கலைஞராக உள்ளார். அவரது தாத்தா யாருக்கும் தெரியாமல் கடைசி காலத்தில் காசிக்கு சென்று விட வேண்டும் என நினைத்து முதல் காட்சியிலேயே திருட்டுத்தனமாக ரயிலில் ஏற நினைக்கும் போது நாயகனின் தம்பி தாத்தாவை தடுத்து நிறுத்தி ஆட்டோவில் அழைத்துக் கொண்டு அம்மாவிடம் காசு வாங்கிக் கொண்டு, டப்பிங் ஸ்டூடியோவில் இருக்கும் அண்ணனிடம் காசு வாங்கிக் கொண்டு, கடைசியாக ஆட்டோவில் இருந்து இறங்கி வீட்டுக்குச் செல்லும் போது ஆட்டோவுக்கு கொடுக்க வேண்டும் என தாத்தாவிடமே காசை கறப்பது என படம் ஆரம்பிக்கும் போது தொடங்கும் காமெடி கடைசி வரை எந்தவொரு பஞ்சமும் இல்லாமல் ரசிகர்களை பார்க்கவும் சிரிக்கவும் வைத்து விடுகிறது. அதிலும் அர்த்த ராத்திரியில் ஹீரோவின் அப்பா ரயிலை விட்டு இறங்க, அவரை ரயிலுக்குள் இழுக்கிறேன் என அவங்க அம்மா கை கொடுக்க, அவங்க ஏர்ல பறந்து வந்து கீழே விழுவுற சீனெல்லாம் சிரித்து மாளாது.*

*இசை: விஷ்ணு விஜய் இயக்கம்: நிதிஷ் சகாதேவ் பசில் ஜோசப், ஜெகதீஷ், மஞ்சு பிள்ளை,*

# தீராத கடன் தீர்க்கும் ருண விமோசன பிரதோஷம்.. விரதமிருந்து வணங்கினால் என்னென்ன நன்மைகள்

சென்னை: ருண விமோசன பிரதோஷம் செவ்வாய்க்கிழமை வரும் பிரதோஷம். இந்த நாளில் விரதமிருந்து சிவபெருமானுக்கும் நந்தி தேவருக்கும் அபிசேஷகப் பொருட்களை வாங்கிக் கொடுத்து தரிசனம் செய்ய தீராத கடனும் தீரும் என்பது நம்பிக்கை.

தோஷம் நீக்கும் சிவ வழிபாடு: சுக்ல பிரதோஷம், கிருஷ்ண பிரதோஷம் என ஒரு மாதத்தில் இரண்டு பிரதோஷங்கள் வருகின்றன. இன்று கிருஷ்ண பட்ச பிரதோஷம். தேய்பிறை பிரதோஷம். பொதுவாக ஜாதகத்தில் எந்த தோஷம் இருந்தாலும் பிரதோஷத்தில் சிவாலயங்களில் சிவ வழிபாடு செய்வதால் எல்லா தோஷமும் நீங்கிவிடும்.

கடன் தீர்க்கும் பிரதோஷம்: செவ்வாய்கிழமை நாளைய தினம் பிரதோஷம் சிறப்பு வாய்ந்தது. இந்த நாளில் சிவ தரிசனம் செய்வதால் மனிதனுக்கு வரும் ருணம், கடன் தொல்லை, எதிரி தொல்லைகளை நீக்கக் கூடிய பிரதோஷம் என்பது கூடுதல் சிறப்பு. செவ்வாய் கிரகத்தினால் ஏற்படும் கெடுபலன் நீங்கும் மேலும் பித்ரு தோஷமும் விலகும் என்பது நம்பிக்கை.

சிவ தரிசனம்: பிரதோஷ நாளில் சிவனை தரிசித்தால் கடன், வறுமை, நோய் பயம் போன்றவை விலகும். சோமவாரம் எனப்படும் திங்கட்கிழமையன்று பிரதோஷ தரிசனம் செய்பவர்கள் எல்லா தேவர்களையும் தரிசித்த புண்ணியத்தை பெறுகிறார்கள். சோம வாரப் பிரதோஷ விரதமும் சிவ தரிசனமும் வாழ்வில் ஒளியேற்றும். நம்முடைய வம்சத்தை விருத்தியாக்கும். வளமும் நலமும் தந்து வாழச் செய்யும். மார்கழி மாத தேய்பிறை பிரதோஷம்: மார்கழி மாதம் என்பது சைவ மற்றும் வைணவ சம்பிரதாயத்தை பின்பற்றும் மக்களுக்கு ஆன்மீக முக்கியத்துவம் கொண்ட ஒரு மாதமாகும். மார்கழி மாதம் முழுவதும் இறைவனின் சிந்தனையிலும், வழிபாடுகளிலும் ஈடுபடுவதால் நாம் செய்த பாவங்கள் நீங்கப்பெற்று, நமக்கு வாழ்வில் பல இன்பமான நிகழ்வுகள் உண்டாகும். இந்த மாதத்தில் வரும் பிரதோஷ தினங்கள் மிகவும் சிறப்பானது.

பசும்பால் அபிஷேகம்: பிரதோஷ நேரத்தில் நந்தி, சிவபெருமானுக்கு நடைபெறும் அர்ச்சனையின் போது நாம் அருகம்புல் நந்திக்கும் வில்வ இலை சிவனுக்கும் வாங்கிக் கொடுக்கலாம். பசும்பாலினை அபிஷேகத்திற்கு கொடுப்பதால் சகல நன்மைகளும் கிடைக்கும். நெய், சந்தனம், பன்னீர் என அவரவர்கள் வசதிக்கு ஏற்ப வாங்கிக்கொடுக்கலாம். சகல தோஷங்களும் நீங்கும்: தும்பைப் பூ மாலை அணிவித்து பிரதோஷ தினத்தன்று சிவனை வணங்கினால் சகல தோஷங்களும், அதாவது ஏழு ஜென்மத்திலும் இருக்கக்கூடிய தோஷங்கள், பிரம்மஹத்தி தோஷம் விலகும் என்பது நம்பிக்கை. செவ்வாய்கிழமை பிரதோஷம்: செவ்வாய் திசை நடப்பவர்கள்,செவ்வாயை லக்னாதிபதியாகக் கொண்டவர்கள், மேஷ,விருச்சிக ராசிக்காரர்கள், மிருகசிரிடம் ,சித்திரை, அவிட்ட நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் செவ்வாய் கிழமை வரும் பிரதோஷ தினத்தில் சிவ ஆலயம் சென்று நந்தி, சிவன் தரிசனம் செய்யவேண்டும். சிவ தாண்டவ தரிசனம்: பிரதோஷ நேரத்தில் சிவன் ஆடுகின்ற ஆனந்த நடனத்தை தேவர்களும், முனிவர்களும் கண்டுகளிப்பதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது. சிவபெருமான் தாண்டவமாடியதைப் பார்த்த நந்திதேவரின் உடல் ஆனந்த மிகுதியால் பருத்தது இதனால் கயிலாயமே மறைந்ததாம். அதனால்தான், பிரதோஷ காலத்தில் நந்தி பகவானின் கொம்புகளின் ஊடாக சிவதரிசனம் செய்ய வேண்டும் என்கிறார்கள் பெரியோர்கள். நந்திக்கு காப்பரிசி: பிரதோஷ காலத்தில் காப்பரிசி நிவேதனத்தை நந்திக்கு சமர்ப்பிப்பது மிகவும் சிறப்பானது. பச்சரிசி, பாசிப் பருப்பு ஆகியவற்றை தண்ணீரில் ஊற வைத்து பிறகு அதை வடிகட்டி வெல்லம், தேங்காய்ப்பூ சேர்த்து காப்பரிசி தயாரிக்க வேண்டும். நந்தியம்பெருமானுக்கு அருகம்புல் அல்லது வில்வ மாலை சார்த்தி நெய் விளக்கு ஏற்றி பூஜை செய்வது சிறப்பு. சனி தோஷம் நீங்கும்: செவ்வாய்கிழமை பிரதோஷ தினமான நாளைய தினம் மாலை நேரத்தில் சிவன் கோவில் சென்று ஒரு கைப்பிடி காப்பரிசி ஒரு பிடி வன்னி இலை, ஒரு பிடி அருகம் புல் ஆகியவற்றை நந்தியின் கொம்புகளுக்கிடையில் வைத்து விளக்கேற்றி நந்தியையும் சிவனையும் வணங்கினால் சனி பகவானால் உண்டாகும் சகல துன்பங்களும் விலகும் என்பது நம்பிக்கை.



வாசகர்களுக்கு

# Calendar 2024

இனிய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## January

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## February

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | | |

## March

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## April

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## May

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## June

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## July

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## August

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## September

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## October

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## November

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## December

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

K.MAHESHWARI
Proprietrix
sairamenterprises508@gmail.com

73974 34540
91760 29729

# SAI RAM ENTERPRISES






No: 135/C-, Poonamallee High Road, Velappanchavadi, Chennai-600077

**WE MAKE THE OUTLOOK SAFE & WONDERFUL**



# இல்லத்தரசிகளே இத மட்டும் மறக்காதீங்க.. பல மடங்கு சேமிக்கலாம்.. 6ஆவது பாயிண்ட் ரொம்ப முக்கியம்!



**முக்கியம்:**

வரவு செலவைச் சரியாக நிர்வகித்தால் மட்டுமே குடும்பத்தைத் திறம்பட நடத்த முடியும். மேலும், இல்லத்தரசிகளால் இங்கே தான் பணத்தை தங்களுக்கு எனச் சேமிக்கவும் முடியும். ஏனென்றால் இல்லத்தரசிகள் பெரும்பாலும் அவர்கள் கணவனையே பொருளாதார ரீதியாகச் சார்ந்து இருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது குடும்ப பட்ஜெட்டை திறம்படப் போட்டு, அதில் பணத்தைச் சேமிக்க முடிந்தால் அது அவர்களுக்கு மிகப் பெரியளவில் உதவும். அப்படி இல்லத்தரசிகள் பின்பற்ற வேண்டிய விஷயங்கள் குறித்து நாம் பார்க்கலாம்.

**பட்ஜெட்:**

உங்கள் மாத வருமானம் மற்றும் செலவுகளைக் காட்டும் தெளிவான பட்ஜெட்டை உருவாக்குங்கள்.. கட்ட வேண்டிய பில்கள், மளிகை பொருட்கள், போக்குவரத்து, வெளியே செல்லும் போது ஆகும் செலவுகள் என அனைத்தையும் பட்டியலிட்டு அந்த பட்ஜெட்டிற்குள் செலவு செய்யுங்கள். பட்ஜெட் போடுவது மட்டுமே நிதி நிலைமை குறித்த விரிவான பார்வையை நமக்குத் தரும். எங்கே செலவுகளைக் குறைக்கலாம் என்பதையும் அறிய உதவும்.

**திட்டமிடல்:**

அதேபோல அந்த வாரம் என்ன சமைக்கப் போகிறோம் என்பதையும் முன்கூட்டியே திட்டமிடுங்கள். இப்படி உணவை முன்கூட்டியே திட்டமிடுவது மளிகை பொருட்களில் பணத்தைச் சேமிக்க மிகப் பெரியளவில் உதவும். அந்த வாரம் என்ன சமைக்கப் போகிறோம் என்பதை முடிவு செய்து அதையே பின்பற்றுங்கள். ஷாப்பிங் செல்லும் போது பொருட்களை மொத்தமாக வாங்குகள். அது நேரத்தை மட்டுமின்றி பணத்தையும் மிச்சப்படுத்தும்.

**ஆப்பர்கள்:**

மளிகை பொருட்கள் மற்றும் வீட்டுப் பொருட்களை வாங்கும்போது கூப்பன்கள், தள்ளுபடி, கேஷ்பேக் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இப்போது பெரிய ஸ்டோர்கள், ஆன்லைன் தளங்கள் என அனைத்தும் ஆப்பர்களை வழங்குகிறது. ஒரு ஐந்து நிமிடம் கூடுதலாகத் தேடினால் இந்த ஆப்பர்கள் குறித்து நமக்குத் தெரிந்துவிடும். எனவே, அதை மிஸ் செய்யாமல் பயன்படுத்துங்கள்.

**மின்சார கட்டணம்:**

அதேபோல நாம் அதிகம் மிச்சப்படுத்தக் கூடிய மற்றொரு முக்கிய இடம் மின்சார கட்டணம். தேவையில்லாமல் ஓடும் மின்சாதனங்களை ஆப் செய்து வைக்கவும். மின் கட்டணத்தைக் குறிப்பிட்ட யூனிட்கள்களுக்குள் வைத்துக் கொண்டால் மிகப் பெரிய தொகையை நம்மால் சேமிக்க முடியும். எனவே, அதைக் கவனமாக நோட் செய்து பின்பற்றுங்கள்.

**சிறு சிறு பணிகள்:**

சிறு சிறு ரிப்பேர் பணிகளைச் செய்ய கற்றுக் கொள்ளலாம். அவை தேவையில்லாத செலவுகளைக் குறைக்கும். மேலும், புதிய பொருட்களை வாங்குவதற்குப் பதிலாகப் பல விஷயங்களில் செகண்ட் ஹேண்ட் பொருட்களை வாங்கலாம். இப்போது பல துறைகளில் செகண்ட் சந்தையில் நமக்குத் தரமான பொருட்களே கிடைக்கிறது. எனவே, இதன் மூலமும் கணிசமான தொகையை நாம் மிச்சப்படுத்தலாம்.

**அவசர நிதி:**

அவசர நிதியை எப்போதும் வைத்துக் கொள்ளுங்கள். அது எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்க உதவும். மருத்துவக் கட்டணம், வீடுகளை ரிப்பேர் செய்வது, போன்ற எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்க அது மிகப் பெரியளவில் உதவும். அவசரக் காலங்களில் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவது, கிரெட்டிட் கார்டு லோன் வாங்கி மாட்டுவது உள்ளிட்ட ஆபத்துகளில் இருந்து இது நம்மை காப்பாற்றும்

ஜெய் ஸ்ரீராம் ஓம் அகத்தீசாய நமஹ : ஸ்ரீ அண்ணமார் துணை

சிற்ப சாஸ்திர முறைப்படி அனைத்து வகையான ஆலய சுவாமி சிற்பங்கள், குதிரைகள், முனியப்ப சுவாமிகள், அய்யனார், கருப்பசாமி, கோபுர சிற்பங்கள், கோபுரங்கள், ராஜ கோபுரங்கள் மற்றும் கோவில் அஸ்திவாரம் முதல் கலசம் வரை அனைத்து உயரங்களிலும் வேலைபாடுகளும் சிறப்பான முறையில் குறைந்த தொகையில் செய்து தரப்படும். பஞ்சவர்ண வேலைபாடுகள் சிறப்பான முறையில் செய்து தரப்படும்.

சிமெண்ட், கருங்கல், மெழுகு பாசனங்கள், உலோகம் ஆகியவற்றில் தேவைக்கேற்வாறு சிறப்பாக அனைத்து உயரங்களிலும் செய்து தரப்படும்.

**ஸ்ரீ செல்லாண்டி அம்மன் சிற்பக் கலைக்கூடம்**

**சத்தியமங்கலம் மெயின்ரோடு, பால் சொசைட்டி அருகில்,**

**கரட்டடிபாளையம் அஞ்சல், கோபி – 638453, ஈரோடு மாவட்டம்**

Temple Architecture & Sculpture

பாரம்பரிய சிற்பி. **K.அருண்**

தொடர்புக்கு : **97918 79732, 94899 92230**


## சமையல் மேடை



**தேவையான பொருட்கள் :**

1. கோழிக்கறி (Boneless) – 250 கிராம்
2. மஞ்சள் தூள் – 1 தேக்கரண்டி
3. மிளகாய்த்தூள் – 2 தேக்கரண்டி
4. கரமசாலா – 1 தேக்கரண்டி
5. தனியா தூள் – 1 தேக்கரண்டி
6. மிளகுத்தூள் – 1 தேக்கரண்டி
7. ஐஸ் குச்சி –5

**செய்முறை :**

எலும்பு நீக்கிய சிக்கனை கொரகொரப்பாக (Not finely Grained) அரைத்து விட்டு, ஒரு பாத்திரத்தில் மாற்றிக் கொள்ளவும், அதில் மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், கரமசாலா தூள், தனியா தூள், மிளகுத்தூள் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு உப்பு சேர்த்துக் பிசைந்து கொள்ளவும். படத்தில் காட்டியுள்ளவாறு ஐஸ் குச்சி உபயோகித்து தட்டிக் கொள்ளவும். தோசைக்கல்லில் சிறிதளவு எண்ணைய் விட்டு பொரித்து எடுத்துக்கொள்ளவும், இதற்கு மயானாஸ், டொமொட்டோ ஸ்கெட்ச் அப் அல்லது புதினா சட்னி சைட்டிஸ் ஆக சேர்த்துக் கொள்ளலாம்.


**We are specialized in :-** Kalkozhi, Kola Urundai (both Veg & Non-Veg), Uppukkari, Fried Items Seeraga Samba Rice Biriyani, Sea Foods and all other Gravy available

Pre & Bulk orders & Corporate orders undertaken Contact : **99624 21527**

VAISHU'S KITCHEN

Availble in zomato

# மகளிருக்கான விளக்குப் பூஜை

அன்பர்களுக்கு வணக்கம்,

வெள்ளி மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் பெண்கள் விளக்கு பூஜை செய்வது மிகுந்த நன்மையை தரும். பஞ்சினால் திரிக்கப்பட்ட திரிகள் சகல நன்மைகளை தரும். அகல் விளக்கு, எண்ணெய், திரி, ஜோதி ஆகிய நான்கும் இணைவதே விளக்காகும். இவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு அர்த்தங்களை குறிக்கும்.

இவையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு அமைப்புகள் ஆகும். இதனைக் கொண்டே ஆன்ம ஞானத்தை பெற வேண்டும் என்பதே விளக்கின் மங்கள தத்துவம் ஆகும்......

உடலும் , குத்து விளக்கும் இணையும் கோட்பாடு:

விளக்கின் அடிப்பாகம், நமது உடலின் தொப்புளுக்கு கீழ் உள்ள மூலாதாரம், விளக்கின் தண்டு முதுகுத்தண்டு வழியே மேல் நோக்கி செல்லும் சூட்சுமநாடி! கழுத்துக்கு மேற்பட்ட பகுதியே குத்துவிளக்கின் தீபம்.

இறை ஆன்ம தொடர்பினை உண்டாக்கும் தீபம்:

ஆன்மாவுக்கும், ஆண்டவனுக்கும் இடையில் உள்ள உறவை விளக்குகள் உணர்த்துகின்றன! விளக்கு உடலாகவும், நெய் உணர்வுகளாகவும், திரிகள் ஆன்மாவாகவும், சுடர் ஆன்ம ஒளியாகவும் திகழ்கின்றன! விளக்கின் சுடரை ஏற்றும் மற்றொரு சுடர் இறையருள் ஒளியாக உள்ளது. எந்த விளக்கும் தானே எரியாது. சுடரைத் தூண்டக் கூடிய மற்றொரு சுடர் நிச்சயம் தேவை.



அதைப் போல எந்த ஆன்மாவும் தானே முக்தியடைய முடியாது. அதற்குத் துணை செய்ய இறையருள் ஒளி தேவை. இறையருள் ஒளி ஆன்மாவுக்கு கிடைக்கும் போது கிளர்ந்தெழுகின்ற ஆன்மா, தானும் சுடராய்ப் பிரகாசிக்கின்றது.

இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு விளக்கும் (உடலும்), நெய்யும் (உணர்வுகளும்), திரிகளும் (ஆன்மாவும்) கச்சிதமாகப் பக்குவப்பட்டிருக்க வேண்டும்..

குத்துவிளக்கில் பெண்மை:

குத்துவிளக்கில் இருக்கின்ற ஐந்து முகங்களும், பெண்களுக்கு இருக்க வேண்டிய ஐந்து முக்கிய குணங்களை நினைவூட்டுகின்றன. அவை, அன்பு, மன உறுதி, நிதானம்,விவேகம், நற்குணம் ஆகியனவாகும்.

விளக்கு ஏற்ற உகந்த நாட்கள்:

செவ்வாய் கிழமை,வெள்ளிக்கிழமை, கார்த்திகை, திருவாதிரை, பூசம், விசாகம், திருவோணம் ஆகிய நட்சத்திர நாட்கள், பவுர்ணமி, அமாவாசை, சதுர்த்தி, பஞ்சமி, ஏகாதசி ஆகிய திதிகளிலும் மற்றும் நவராத்திரி, சிவராத்திரி, ஆடிச் செவ்வாய், ஆடி வெள்ளி, தைச் செவ்வாய், தை வெள்ளி ஆகிய நாட்கள் திருவிளக்கு ஏற்ற நாட்கள் உகந்த நாட்கள் ஆகும்.கூட்டு பிரார்த்தனை விளக்கு பூஜையும் செய்யலாம்...மற்றும் வீட்டில் தினமும் தீபம் இட்டு வழிபாடு செய்வது குடும்ப சுபிட்சம் பெற்று நல் வாழ்வு வழங்கும்.

பூஜைக்கு ஏற்ற விளக்குகள்:

பூஜை செய்யும் விளக்குகளில் வெள்ளி விளக்கு மிகச் சிறப்புடையது. ஐம்பொன் விளக்கும் சிறப்புடையது.வெண்கல விளக்கு அடுத்துச் சிறப்புடையது. பித்தளை விளக்கு அதற்கு அடுத்துச் சிறப்புடையது. அவரவர் விருப்பப்படியும், வசதிப்படியும் தீபங்களை அமைத்துக் கொள்ளலாம்.

மண் அகல் விளக்குகளை மாடத்தில் வைக்கவும். இவை அலங்கார பூஜைக்கும், கார்த்திகை தீபத்திற்கும் மற்றவற்றிற்கும் சிறப்புடையன. அரிசி மாவு விளக்கை தெய்வமாடத்தில் ஏற்றலாம்.

தீபங்களும் திரிகளும்:

பருத்தி பஞ்சினால் ஆன திரிகள் மங்களத்தை தரும்..இலவம் பஞ்சினால் திரிக்கப்பட்ட திரிகள் சகலபாக்கியங்களையும் தரும்.

தாமரைத்தண்டின் நூலால் திரிக்கப்பட்ட திரியானது. முன் வினைப் பாவத்தை போக்கும். செல்வம் நிலைத்து இருக்கும்.

வாழைத் தண்டு நாரினால் உருவாக்கப்பட்ட திரியைப் பயன்படுத்துவதால், குழந்தைச் செல்வம் உண்டாகும். தெய்வக் குற்றம், குடும்ப சாபம் முதலியவை நீங்கி அமைதி உண்டாகும். குல தெய்வ குறைபாடு நீங்கும்.

வெள்ளை எருக்கம் பட்டையில் திரித்த திரியால், பெருத்த செல்வம் தரும். தீய சக்திகளின் தொல்லைகள் நீங்கும். பிள்ளையார்

அருள் கிட்டும்.

அம்மனுக்கு சாற்றிய புதுமஞ்சள் சேலை திரி:

அம்மன் அருள் கிட்டும், வியாதிகள் குணமாகும்..

சிகப்பு நிற சேலைத் திரி:

திருமணத் தடை நீங்கும், மலட்டுத்தன்மை செய்வினை தோஷங்கள் முதலானவை விலகும்.

பன்னீர் விட்டு காய வைத்த புது வெள்ளைத் துணியினால் திரிக்கப்பட்ட திரியைப் பயன்படுத்துவதால் மங்கள காரியங்கள் நடக்கும்.

தீபத்திற்கு ஆகாத எண்ணை!

கடலை எண்ணெய், பாமாயில், ரீபைண்டு ஆயில், கடுகு எண்ணெய் போன்றவற்றை விளக்கேற்ற பயன்படுத்தக்கூடாது. இவற்றால் தீமைகளே ஏற்படும்.

தெய்வங்கள் மற்றும் தீபத்திற்கு உகந்த எண்ணெய்:

மகாலட்சுமிக்கு– நெய்

திருமால், சர்வதேவதைகளுக்கு– நல்லெண்ணை

விநாயகருக்கு– தேங்காய் எண்ணெய்

சிவபெருமானுக்கு– இலுப்பை எண்ணெய்

அம்பாளுக்கு– நெய்,விளக்கெண்ணெய், வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய் இந்த ஐந்து எண்ணெய்களையும் கலந்து ஊற்றி ஒரு கிரஹ மண்டலம் (90 நாட்கள்) பூஜை செய்ய, அம்பாளின் அருள் கிடைக்கும்.

பசு நெய்: லட்சுமி வாசம் செய்வாள், புத்திர பாக்கியம் கிட்டும்.

நல்லெண்ணை: பூஜை தீபத்திற்கு சிறந்தது, சனி பரிகாரம் தரும், லட்சுமிகடாட்சம் உண்டாகும்.

தேங்காய் எண்ணெய்: தெய்வங்கள் வீட்டில் வாசம் செய்யும், கணவன், மனைவி பாசம் கூடும், பழையபாவம் போகும்.

இலுப்பை எண்ணை: எல்லாப் பாவங்களும் போகும், மோட்சம் கிட்டும், நல்ல ஞானம் வரும், பிறப்பு அற்றுப் போகும்.

விளக்கெண்ணை: தெய்வ அருள், புகழ், ஜீவன சுகம், உற்றார் சுகம், தாம்பத்திய சுகம் இவைகளை இது விருத்தி செய்யும்.

வேப்ப எண்ணை: குலதெய்வ அருள் கிடைக்கும்.

மூவகை எண்ணை: நெய், வேப்பஎண்ணெய், இலுப்பை எண்ணெய் இந்த மூன்றும் கலந்து தீபமிட செல்வம் உண்டாகும். ஆரோக்கியம் தரும். இறைவழிபாட்டுக்கு மிகவும் உகந்தது.

தீபம் ஏற்றுவதின் பலன்கள்:

ஒருமுக தீபம்: சாதாரணமாக வீடுகளில், குத்து விளக்கில் ஒற்றைத் திரியுள்ள தீபம் ஏற்றக்கூடாது.

இருமுக தீபம்: பிரிந்தவர் கூடுவர், குடும்ப ஒற்றுமை வளரும்.

மூன்றுமுக தீபம்: புத்திர சுகம் ஏற்படும். குழந்தைகளுக்கு படிப்பில் ஏற்படும் மறதி குறையும்.

நான்முக தீபம்: பால்பாக்கியம் கிட்டும், பூமியின் அருள் கூடி நிலம் கிடைக்கும்.

ஐந்துமுக தீபம்: அனைத்து நலன்களுடன் அம்பிகையின் பூரண அருளும் கிட்டும்.

தீபம் ஏற்ற வேண்டிய திசைகள்:

கிழக்குத் திசை நோக்கி விளக்கேற்ற, துன்பங்கள் நீங்கும்.

மேற்கு திசை நோக்கி விளக்கேற்ற கடன் தொல்லை நீங்கும், பகை நீங்கும்.

வடக்கு திசை நோக்கி விளக்கேற்ற திருமணத்தடை, சுபகாரியத்தடை, கல்வித்தடை, வேலை வாய்ப்புத் தடை நீங்கும். திரவியம் கிட்டும். சர்வ மங்களங்கள் உண்டாகும்.

தீபம் ஏற்றக் கூடாத திசை!

தெற்குத் திசை நோக்கி எப்போதும் விளக்கேற்றக் கூடாது. அதனால் தீமைகளே ஏற்படும்.

விளக்கிற்கு பொட்டு வைத்தல்:

விளக்கிற்கு விபூதி, குங்குமம், மஞ்சள், சந்தனம் என உச்சியில் ஆரம்பித்து 9 பொட்டுகள் வைக்க வேண்டும்.. ஒவ்வொரு பொட்டும் குலதெய்வ அம்சங்களை குறிக்கும்.....

விளக்கிற்கு ஏற்ற ஆசனம்:

விளக்குகளை வெறும் தரையில் வைக்கக்கூடாது! அவற்றை வெள்ளி, செம்பு, பித்தளை, பஞ்சலோகம் முதலியவற்றால் ஆன ஒரு தாம்பளத்தின் மீதே வைக்க வேண்டும். அல்லது மரத்தினால் ஆன வேம்பு ,அத்தி,மா,

பலா, போன்ற பலகையின் மீது வைத்து, திருவிளக்கிற்கு ஏற்ற ஆசனத்தை அமைக்க வேண்டும்.

விளக்கை அலங்கரிக்கும் முறை:

ஐந்து முக குத்து விளக்கைப் தூய்மையாக துலக்கி ஈரம் போகத் துடைத்து, ஐந்து முகங்களிலும் குங்குமம், மஞ்சள், சந்தனம் ஆகியவற்றால் பொட்டு வைக்க வேண்டும். பிறகு பீடத்திற்கும் குங்குமம், மஞ்சள், சந்தனப் பொட்டு வைக்க வேண்டும். பிறகு நல்ல வாசனையுள்ள மலர்களால் குத்துவிளக்கை அலங்கரிக்க வேண்டும்.

குத்துவிளக்கின் அடிப்பாகத்தில் பூச்சூட்டும் போது ஈன்ற தாயை, பிறந்த வீட்டை, அவர்கள் நலனை வேண்டி பூச்சூட வேண்டும். நடுப்பகுதியில் பூச்சூட்டும் போது, கணவன், குழந்தைகள், புகுந்த வீட்டை நினைத்து, இல்லறம் நல்லறமாய் இருக்க பிரார்த்தனை செய்து பூச்சூட வேண்டும்.

உச்சிப் பகுதியில் பூச்சூட்டும் போது, தீப லட்சுமியே! உன் அருள் பரிபூரணமாக கிடைக்க வேண்டும் என்று மனமுருக வேண்டி பூச்சூட வேண்டும்.

இவ்வாறு திருவிளக்கை அலங்கரித்து பூஜை செய்ய மங்கலம் பொங்கும்.

அகல் விளக்குகளை தூய நீரில் அல்லது பன்னீரில் கழுவி உட்புறமாக பசு மாட்டின் சாணத்தை தடவி காய வைத்து பின்பு நெய் அல்லது பலன்களுக்கேற்ப எண்ணெய் ஊற்றி தீபமிட்டால் மற்றுமே முழுமையான பலன்களை பெற முடியும்....ஏனென்றால் நீங்கள் அனைவரும் யோசித்து பாருங்கள் முன்பு போல ஜோதிடர்கள் கூறும் இந்த கோவிலுக்கு ,

இத்தனை நாட்கள் தீபம் இடுங்கள் என்று கூறுவார்கள்...அந்த

பரிகாரங்கள் ஏன் பலிப்பதில்லை என்று.... ஏனென்றால் முன்பு போல நாம் எவரும் தூய்மையான நெய், மற்றும் தூய்மையான எண்ணெய்களை பயன்படுத்துவதில்லை,மற்றும் நான் கூறியவாறு விளக்கினை தூய்மை படுத்தாமல் இருத்தலே ஆகும்).

தீபம் ஏற்றும் நேரம்!

தினமும் அதிகாலை 3 மணி முதல் 5 மணிக்குள் தீபம் ஏற்ற சர்வமங்கல யோகத்தை தரும்.

காலையில் வாசலில் சாணம் தெளித்து, கோலம் இட்ட பின்னரே விளக்கேற்ற வேண்டும்.

மாலை 6 மணி அளவில் வீட்டில் தீபம் ஏற்றி மகாலட்சுமியை வழிபட்டால் நல்ல வேலை, நல்ல கணவன், குடும்ப சுகம், புத்திர சுகம் ஆகியவை தேடி வரும்.

மாலையில், விளக்கேற்றும் போது வாசலில் தண்ணீர் தெளித்துக் கோலம் இட்ட பின்னரே விளக்கேற்ற வேண்டும்.

காலை, மாலை விளக்கேற்றும் போது பின் புற கதவை சாத்திவிட வேண்டும். பின் புற கதவு இல்லாதவர்கள் பின்பக்கமுள்ள சன்னல் கதவை சாத்தியே விளக்கேற்ற வேண்டும்.

விளக்கேற்றும் போது விளக்கிற்குப் பால், கல்கண்டு நிவேதம் வைத்து வழிபட எல்லா நன்மைகளும் உண்டாகும்.

விளக்குப் பாடல்!

வீட்டில் விளக்கேற்றும் போது கீழ்க்கண்ட அழைப்பு பாடலை 3 முறை பாடி தீபமிடவேண்டும்..

பின்பு விருந்து பாடலை 6 முறை பாடி ஒவ்வொரு முறையும் விளக்கிற்கு பூ போட்டு, பூமியைத் தொட்டு வணங்கி வழிபட எல்லா சுகங்களும் கிட்டும்!

அழைப்பு பாடல்:

பெருந்தேன் இறைக்கும்
நறைக்கூந்தல்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌவிப்
பெம்மான் முக்கட் சுடர்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமானந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே
சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

நன்றி!.........


# ஸ்ரீ அகஸ்தியர் பரிகார பீடம்



# ஸ்ரீ மாருதி குரு மாதா சொர்ணமுகி

## கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்

தொடர்புக்கு : **9345257949**

# காசி ஆன்மீக யாத்திரை

## காசியில் முப்பெரும் விழா

## 108 சித்தர்கள் கூட்டமைப்பு நடத்தும்

## காசி மகேஸ்வரர் பூஜை சான்றிதழ் வழங்கும் விழா

## காசியில் அன்னம் அளிப்பு




புறப்படும் நாள் :........................................

புறப்படும் இடம் : மத்திய இரயில் நிலையம், சென்னை

பயண நாட்கள் : 7

### பயண விபரம்

நாள் 1 : சென்னையில் இருந்து இரயிலில் புறப்படுதல்

நாள் 2 : இரவு காசி அடைந்து தங்குதல்

நாள் 3 : காசி சுற்றிப்பார்த்தல், ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஆலயம், அன்னபூரணி அம்மன் தரிசனம், காசி விசாலாட்சி கோயில் தரிசனம், காலபைரவர் கோயில், சங்கட் மோட்சன் ஹனுமான் மந்திர், துர்கா தேவி ஆலயம், துளசி மானஸ் மந்திர் மற்றும் பல மாலை கங்கா ஆரத்தி காணுதல் இரவு காசியில் தங்குதல்.

நாள் 4: காலை 108 சித்தர்கள் கூட்டமைப்பு நடத்தும் காசி மகேஸ்வவர் பூஜை மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா. இரவு காசியிலிருந்து சென்னைக்கு இரயிலில் புறப்படுதல்

நாள் 5 : இரயில் பயணம்

நாள் 6: காலை அனைவரும் நலமுடன் சென்னை வந்து சேருதல்

பயணக்கட்டணம் : ரூ.

**பயணக்கட்டணத்தில் உள்ளடக்கம் :** இரயில் கட்டணம், தங்குமிடக் கட்டணம், சைவ உணவு (இரயில் பயணங்களில் நீங்கலாக) இரயில் நிலையம் – தங்குமிடம் செல்லும் வாகனக் கட்டணம்

**தொடர்புக்கு : 98409 78262 / 94440 12235**

# Dr. Arockiam
CEO

+91 90476 44077
+91 421 4323028

# Sunlight
## Security Services

*Your Security is our Priority*

S - sensible
E - efficient in work
C - claver
U - understanding
R - regular
I - intelligent
T - talent
Y - young



No.25/9, Ganga Nagar, 1st Street, Avinashi Road, Tirupur - 641602

info@sunlightsecurityservices.com www.sunlightsecurityservices.com